# நல்லூரான் வீதி நடந்தால் வினை தீரும்



அமரர் உயர்திரு. க. சுப்பிரமணியம்

இறைவன் இறையடி சேர்ந்தமை குறித்த

# நினைவு மலர்

2001.08.05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சமர்ப்பணம்

எங்களின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும்
மெழுகுவர்த்தியாக இருந்து
தன்னையே உருக்கி ஒளியூட்டிய
எங்களின் ஆருயிர் தெய்வத்தின்
இனிய நினைவுகளை எங்களின்
இதயங்களில் சுமந்த வண்ணம்
இம் மலரை
அவர் தம் தாழ்களுக்கு
அர்ப்பணிக்கின்றோம்.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர் உயர்திரு.க.சுப்பிரமணியம்

(சோதிடர்)

அன்னை மடியில்
1906.03.18

ஆண்டவன் அடியில்
2001.07.16

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டு விஷு ஆனி முப்பத்திரண்டு திங்கள்
பூண்டதிதி அபர ஏகாதசி - ஈண்டு புகழ்
உத்தராயனப் புண்ணியதினம் - சுப்பிரமணியர்
இத்தரணியை விட்ட நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் க.சுப்பிரமணியம்
# அவர்களின் சிறப்பியல்புகள்.....

அமரர் கதிரேசு சுப்பிரமணியம் பிரபல சோதிடர். யாழ்ப்பாணத் தீவகம் மண்கும்பான் விநாயகராலயச் சுற்றாடலில் உயர் வேளாண் குல திலகர் கதிரேசு, அவர்தம் பாரியார் விசாலாட்சி அம்மையாருக்கு மகனாக அவதரித்தார். இவரின் இளவயதிலேயே குடும்பத்தில் பலர் அடுத்தடுத்து இறந்து போனதைக் கண்டு வாழ்க்கை நிலையாமையை உணர்ந்து ஆத்மீக நாட்டம் கொண்டு தனது சந்தேகங்களைத் தீர்க்கக் கூடிய குருவைத் தேடலானார்.

இவரின் தவப்பயனால் இவர் தேடிய குரு வெகு சீக்கிரமே கிடைத்துவிட்டார். ஆம் அவர்தான் வேலணைக் கறுவல் ஐயர் என அழைக்கப்படும் மகா ஞானியாவார். ஐயர் அவர்களின் திரு வருளால் எம் சுப்பிரமணியம் அவர்கள் யோகம், ஞானம் மற்றும் சோதிடம், மாந்திரீகம் முதலியவற்றிலும் மிக இலகுவில் தேர்ச்சி பெற்றுவிட்டார். பின்னர் குருவின் அறிவுறுத்தலின்படி புண்ணிய பாரதம் சென்று அங்கும் மேலதிகமாக சோதிடம் மாந்திரீகம் முதலிய வற்றில் பயிற்சி பெற்று திருவண்ணாமலை ஜோதி மகரிஷி அவர் களையும் காஞ்சி முனிவர் போன்றோரையும் தரிசித்து அவர்களின் நல்லாசியும் பெற்றுக்கொண்டு தாயகம் திரும்பினார்.

ஜோதி வடிவான சூரியனிலிருந்தே சோதிடம் தொடங்குகின்றது. மனிதரின் வாழ்க்கையில் பலப்பல விந்தைகளை கிரகங்கள் புரி கின்றன. அரசன் ஆண்டியாவதும் ஆண்டி அரசனாவதும், கோடீஸ் வரன் பிச்சை எடுப்பதும் பிச்சைக்காரன் கோடீஸ்வரனாவதும் நோயாளியாக நீண்ட ஆயுளுடன் வாழ்வதும் மன்மதனுக்கு ஒப்பான வன் திடீரென இறப்பதும் கிரகங்கள் செய்யும் விந்தைகளே. இந்தக் கிரகங்களின் வலிமையை உணர்ந்த சோதியைக் கண்ட வித்தகரே நம் சுப்பிரமணியம் சாஸ்திரியார்.

இவரின் வாழ்விலும் கிரக பலனின் பயனாக பல மாற்றங்களைக் காணக்கூடியதாக இருந்தது. இவர் வாழ்க்கை நிலையாமையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைத்து துறவு வாழ்வை விரும்பியபோதும் இவர் ஒரு கிரகஸ் தனாக இல்லற ஞானியாகவாழவேண்டிய நியதி இருந்ததினால் அவரின் குருவின் ஆணைப்படியும் தாயாரின் சத்தியத்தை மீறவும் முடியாமல் கொக்குவில் மேற்கு முத்துத்தம்பி தங்கம்மா தம்பதிகளின் மூத்த புதல்வி நாகரெத்தினம் அவர்களை திருமணம் புரிந்து இனிய இல்லறத்தின் பயனாக ஏழு நன்மக்களைப் பெற்று பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் சகிதம் தனது 96 வயதுவரை நிறைவாழ்வு வாழ்ந்தார்.

குடாநாட்டின் தனிப்பெரும் சோதிட மேதாவாக வாழ்ந்த இவர் பல்லாயிரக்கணக்கான மக்கட்கு வீடுகட்ட மனைப் பொருத்தம் பார்த்தும் பிறந்த குழந்தைகளுக்கு ஜாதகம் எழுதி, திருமணப் பொருத்தம் பார்த்து மக்கள் சமுதாயச் சடங்குகளுக்கு சுபக்கிரக நேரபலன்களைச் சுட்டிக்காட்டி அயராது சேவை செய்து வந்த ஒரு மகான்.

பல வருடங்களாய் தீர்க்க முடியாத பல நோய்களைத் தமது மந்திர வல்லமையால் குணப்படுத்திய பல நூற்றுக்கணக்கான சம்ப வங்களை நாம் எமது கண்முன் கண்டுவந்துள்ளோம். அவர்தம் மந்திர உச்சாடனத்தினாலும் சோதிட அறிவாலும் சமய சந்தர்ப்பங் களை அனுசரித்து தமது இந்த மெய்யறிவு மந்திர சக்தி முழுவதை யும் ஆழ்ந்த சிந்தனையுடன் நோய்வாய்ப்பட்ட மக்களிடம் பிரயோ கித்து நாம் எண்ணிப் பார்க்கமுடியாத பெரும் அரிய வெற்றிச் சாதனைகளைப் புரிந்த சாதனையாளர் நம் சாஸ்திரியார்.

அமரர் க.சுப்பிரமணியம் ஓர் சைவமணி ஆசார சீலர். நல்லூரான் திருவடியை சிந்தை வைத்தவர். அன்னாரின் ஆசார சீலத்தை நம் தவயோக சுவாமிகள் மெச்சி "அடே பிராமணா" என்று அன் புடன் அழைப்பது உண்டு. மற்றும் நம் குடைச் சாமியார் என அழைக்கும் கந்தையா சுவாமிகள் இவரைக் காணும்போதெல்லாம் "அருள் தெரியுது" என்பார். இப்படியாக தனது வாழ்வில் நம் காலத்தில் வாழ்ந்த மாபெரும் ஞானிகளாகிய வேலணை கறுவல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயர், ரமண மகரிஷி, யோக சுவாமிகள், குடையிற் சுவாமிகள் போன்ற தவ சிரேஷ்டர்களின் சத்சங்கத்தால் புடமிடப்பட்ட பெரியாராக மிளிர்ந்தார் என்பது மிகையான கூற்று அல்ல.

இவ்வாறாக அமரர் சுப்பிரமணியம் ஒரு குறையும் இல்லாமல் முழுப்பிரபஞ்ச உண்மைகளையும் உணர்ந்து எப்பவோ முடிந்த முடிவை எங்களுக்கு கடந்த 16.07.2001 அன்று ஆனி மாதம் முப்பத் திரண்டாம் திகதி உத்தராயணத்தில் கார்த்திகை நட்சத்திரத்திலே அபரபட்ச ஏகாதசி திதியிலே நல்லூரான் காலைப்பூசை மணியோசை காதில் விழுந்து கொண்டு இருக்கும் போதே தனது இவ்வுலக வாழ்வை நிறைவு செய்து எல்லாம் வல்ல நல்லைச் சுப்பிரமணி யருடன் நாதவடிவில் கலந்த விந்தையான செயலை யாரறிவார். ஆன்மா அழியாதென்று சொன்ன மொழி நாம் மறந்து போவோமோ அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நாமும் பிரார்த்திப்போம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

*என்னை அறியாமல் என்னுள்ளே நீ இருக்க*
*உன்னை அறியாமல் உடல் இறந்தேன் பூரணமே.*

"ஊருக் குழைத்திடல் யோகம் – நலம்
ஓங்கிடு மாறு வருந்துதல் யாகம்
போருக்கு நிற்கும் போதம் உளம்
பொங்கல் இல்லாத அமைதிமெய்ஞ் ஞானம்"

எழுதிச் செல்லும் விதியின் கை
எழுதி எழுதி தான் செல்லும்
அழுதாலும் புரண்டாலும்
அழுத கண்ணீர் கொண்டதனை
அழித்து எழுத வல்லோமோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# தோத்திரப் பாடல்கள்

**திருமுறை - 1** **பண் - நட்டபாடை**

திருச்சிற்றம்பலம்

தோடுடைய செவியன் விடையேறியோன் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலை பொடிபூசியென் உள்ளம் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்தேத்த வருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மா நிவனன்றே.

**திருமுறை - 2** **பண் - காந்தாரம்**

தந்தையார் போயினார் தாயாரும் போயினார் தாமும் போவார்
கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார் பார்க்கிறார் கொண்டு போவார்
எந்தநாள் வாழ்வதற் கேமனம் வைத்தியா வேழை நெஞ்சே
அந்தணாரூரர் தொழு துய்யலாம் மையல் கொண்டஞ்சலி நெஞ்சே.

**திருமுறை - 3** **பண் - புறநீர்மை**

தாயினும் நல்ல தலைவரென் றடியார் தம்மடி போற்றிசைப்பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பால் நீக்கி நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையுங் கடலொடு சூழ்ந்த கோணமாமலையமர்ந்தாரே.

**திருமுறை - 4** **பண் - காந்தாரம்**

கூற்றா யினவாறு விலக் ககிலீர்
கொடுமை பல செய்தன நானறியேன்
ஏற்றா யடிக்கே யிரவும் பகலும்
பிரியா துவணங் குவனெப் பொழுதும்
தோற்றா தென்வயிற் றினகம் படியே
குடரோடு துடக்கி முடக் கியிட
ஆற்றே னடியே னதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருமுறை - 5**

அன்னம் பாலிக்குந் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கும் மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோவிப் பிறவியே.

**திருமுறை - 6**

நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்
நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்
சினந்திருகு களிற்றுரிவைப் போர்வை வைத்தார்
செழுமதியின் தளிர்வைத்தார் சிறந்து வானோர்
இருந்துருவி மணிமகுடத் தேறத் துற்ற
இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப்பில்கி
நனைந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்லவாறே.

**திருமுறை - 7** பண் - நட்டராகம்

நீள நினைந்தடியே னுமை நித்தலுங் கைதொழுவேன்
வாளன கண்மடவாளவள் வாடி வருந்தாமே
கோளிலியெம் பெருமான் குண்டை யூர்ச்சில நெல்லுப் பெற்றேன்
ஆளிலை யெம்பெருமானவை யட்டித் தரப்பணியே.

**திருமுறை - 8**

**திருவாசகம்**

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகேன் ஆர்க் கெடுத்துரைக்கேன்
ஆண்டநீ அருளி[illegible] யானால்
வார்கடல் உலகில் வாழ்கலேன் கண்டாய்
வருகவென் றருள் புரியாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுறை - 9

**திருவிசைப்பா**

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக்கனியே
அம்பல மாடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்து கந்தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

திருமுறை - 10

**திருமந்திரம்**

ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரியங் காட்டிடைக் கொண்டு போய்ச் சுட்டிட்டு
நீரினனில் மூழ்கி நினைப் பொழிந்தார்களே.

திருமுறை - 11

**பட்டினத்தார் பாடல்**

ஐயுந் தொடர்ந்து விழியுஞ் செருகி யறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற போதென்று வேண்டுவன்யான்
செய்யுந் திருவொற்றி யூருடையீர்! திருநீறு மிட்டுக்
கையுந் தொழப்பண்ணி ஐந்தெழுத் தோதவுங் கற்பியுமே.

திருமுறை - 12

**புராணம்**

நன்மைபெருக அருள் நெறியே வந்தணைந்து நல்லூரின்
மன்னு திருத்தொண்டனார் வணங்கி மகிழ்ந்து எழும்பொழுதில்
உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம் என்று அவர்தம்
சென்னி மிசை பாதமலர் சூட்டினான் சிவபெருமான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

காரணமதாக வந்து புவிமீதே
காலனணுகாதிசைந்து கதிகாண
நாரணனும்வேதன்முன்பு தெரியாதே
ஞானநடமேபுரிந்து வருவாயே
ஆரமுதமானதந்தி மணவாளா
ஆறுமுக மாறிரண்டு விழியோனே
சூர்கிளைமாளவென்ற கதிர்வேலா
சோலைமலை மேவுன்ற பெருமாளே.

## நல்லூர் வெண்பா

நல்லூரான் வீதி நடந்தார் வினைதீர்க்கும்
சொல்லரிய காட்சி தருசுந்தரவேல் – எல்லோர்க்கும்
நாளும்வழி காட்டும் நம்பித் தொழு தெழுவோம்
தோளும் கடம்பும் துணை.

நம்பித் தொழுவார் நலம் பெறுவார் நல்லூரில்
தெம்புதந்து நிற்கின்ற சீர் வேலன் வெம்பி
அழுவாரைக் காப்பான் அரகரா என்றே
அழுவாரைக் காப்பான் விரைந்து

## நற்சிந்தனை - நல்லூரான் திருவடி

நல்லூரான் திருவடியை நான் நினைத்த மாத்திரத்தே
எல்லாம் மறப்பேனடி கிளியே! இரவு பகல் காணேனடி 1.

ஆன்மா அழியா ஒன்று அன்றெனக்குச் சொன்ன மொழி
நான் மறந்து போவேனோடி – கிளியே? நல்லூரான் தஞ்சமடி 2.

தேவர் நிசை மீட்ட செல்வன் திருவடிகள்
காவல் எனக்காமெடி – கிளியே! கவலையெல்லாம் போகுமெடி 3.

எத்தொழிலைச் செய்தாலென் ஏதவத்தைப் பட்டாலென்
கந்தன் திருவடிகள் – கிளியே! காவல் அறிந்திடெடி 4.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சம் படை வந்தாலும் பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களெடி – கிளியே ஆறுமுகன் தஞ்சமெடி 5.

சுவாமி யோகநாதன் சொன்ன திருப்பாட்டைந்தும்
பூமியிற் சொன்னாளெடி – கிளியே பொல்லாங்கு தீருமெடி 6.

**திருமந்திரம்**

சூரிய காந்தமுஞ் சூழ்பஞ்சும் போலவே
சூரிய காந்தஞ் சூழ்பஞ்சைச் சுட்டிடா
சூரியன் சந்நிதி யிற்சுடு மாறுபோல்
சூரியன் தோற்றமுன் அற்ற மலங்களே.

கருடன் உருவம் கருதும் அளவில்
பருவிடம் தீர்ந்து பயங்கெடு மாபோல்
குருவின் உருவம் குறித்தஅப் போதே
திரிமலந் தீர்ந்து சிவனவன் ஆமே.

## நடராஜப்பத்து

மண்ணாதிபூதமொடு விண்ணாதி அண்டம் நீ
மறைநான்கின் அடிமுடியும் நீ
மதியும் நீ ரவியும் நீ புனலும் நீ அனலும் நீ
மண்டல மிரண்டேழும் நீ
பெண்ணும் நீ ஆணும் நீ பல்லுயிர்க்குயிரும் நீ
பிறவும் நீ ஒருவனீயே,
பேதாதி பேதம் நீ பாதாதி கேசம் நீ
பெற்றதாய் தந்தை நீயே
பொன்னும் நீ பொருளும் நீ இருளும் நீ ஒளியும் நீ
போதிக்க வந்தகுருநீ
புகழொணாக்கிரகங்கள் ஒன்பதுவும் நீ யிந்தப்
புவனங்கள் பெற்றவனும் நீ
எண்ணரிய ஜீவகோடிக ளீன்ற வப்பனே
என்குறைக ளார்க்குரைப்பேன்
ஈசனே சிவகாமிநேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே. 1.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானாட மழுவாட மதியாடப் புனலாட
மங்கைசிவ காமியாட
மாலாட நூலாட மறையாடத் திரையாட
மறைதந்த பிரம்மனாட
கோனாட வானுலகு கூட்டமெல்லாமாடக்
குஞ்சர முகத்தனாட
குண்டல மிரண்டாடத் தண்டைபுலி யுடையாடக்
குழந்தை முருகேசனாட
ஞானசம்மந்தரொடு இந்திரர் பதினெட்டுமுனி
யட்டபாலகரு மாட
நரைதும்புரு ஆட நந்திவாகனமாட
நாட்டியப் பெண்களாட
வினையோட உனைநாட எனைநாடி யிதுவேளை
விருதோடு ஆடிவருவாய்
ஈசனே சிவகாமிநேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே. 2.

கடலென்ற புவிமீதில் அலையென்ற உருக்கொண்டு
கனவென்ற வாழ்வைநம்பி
காற்றென்ற மூவாசை மாருதச்சுழலிலே
கட்டுண்டு நித்தநித்தம்
உடலென்ற கும்பிக்கு உணவென்ற இரைதேடி
ஓயாமலிரவு பகலும்
உண்டுண்டுறங்குவதைக் கண்டதே யல்லாது
ஒருபய னடைந்திலேனே
தடமென்ற மிடிகரையில் பந்தபாசங்களெனும்
தாபரப் பின்னலிட்டு
தாயென்று சேயென்று நீயென்று நானென்று
தமியேனை இவ்வண்ணமாய்
இடையென்று கடைநின்று யேனென்று தேடா
திருப்பதுன் னழகாகுமோ
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே. 3.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பம்புசூனியமல்ல வைப்பல்ல மாரணந்
தம்பனம் வசியமல்ல
பாதாள வஞ்சனம் பரகாய பிரவேச
மதுவல்ல ஜாலமல்ல
அம்பு குண்டுகள் விலக மொழியு மந்திரமல்ல
ஆகாய குளிகையல்ல
அன்போடு செய்கின்ற வாதமோடிகளல்ல
அரிய மோகனமுமல்ல
கும்பமுனி மச்சமுனி சட்டமுனி பிரம்மரிஷி
கொங்கணர் புலிப்பாணியும்
கோரக்கர் வள்ளுவர் போகமுனி யிவரெலாம்
கூறிடும் வைத்தியமல்ல
என்மனதுன் னடிவிட்டு நீங்காது நிலைநிற்க
யேதுவுள புகலவருவாய்
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே. 4.

நொந்து வந்தேனென்று ஆயிரம் சொல்லியும்
செவியென்ன மந்தமுண்டோ
நுட்பநெறியறியாத பிள்ளையைப் பெற்றபின்
நோக்காத தந்தையுண்டோ
சந்ததமும் தஞ்சமென்றடியைப் பிடித்தபின்
தளராத நெஞ்சமுண்டோ
தந்திமுகனறுமுகன் இருபிள்ளை யில்லையோ
தந்தை நீ மலடுதானோ
விந்தையும் ஜாலமும் உன்னிடமிருக்குதே
வினையொன்று மறிகிலேனே
வேதமுஞ் சாஸ்திரமும் உன்னையே புகழுதே
வேடிக்கை யிதுவல்லவோ
இந்தவுலகீரேழு மேனளித்தாய் சொல்லும்
இனியுன்னை விடுவதில்லை
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே. 5.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகண்டு வுன்னடியைத் துதியாதபோதிலும்
வாஞ்சை யில்லாதபோதும்
வாலாயமாய்க் கோயில் சுற்றாதபோதிலும்
வஞ்சமே செய்யாதபோதும்
மொழியெ துகைமோனை யில்லாமலே பாடினும்
மூர்க்கனேன் முகடாகினும்
மோசமே செய்யினும் தேசமே கவரினும்
முழுகாமியே யாகினும்
பழியெனக் கல்லவே தாய்தந்தைக் கல்லவோ
பார்த்தவர்கள் சொல்லார்களோ
பாரறியா மனைவிக்குப் பாதியுடலீந்த நீ
பாலனைக் காக்கொணாதோ
எழில்பெரிய அண்டங்க ளடுக்காயமைத்த நீ
யென்குறைகள் தீர்த்தல் பெரிதோ
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே. 6.

அன்னை தந்தைகளென்னை ஈன்றதற்கழுவனோ
அறிவிலாததற் கழுவனோ
அல்லாமல் நான்முகன் தன்னையே நோவனோ
ஆசை மூன்றுக் கழுவனோ
முன்பிறப் பென்னவினை சேய்தேனென் றழுவனோ
மூடவறிவுக் கழுவனோ
முன்பினிலென் வினைவந்து மூளுமென்றழுவனோ
முத்திவருமென் றுணர்வனோ
தன்னைநொந்தழுவனோ உன்னைநொந்தழுவனோ
தவமென்ன வென்றழுவனோ
தையலர்க்கழுவனோ மெய்வளர்ப்பதற்கழுவனோ
தரித்திர திசைக்கழுவனோ
இன்னமென்னப்பிறவி வருமோவென்றழுவனோ
எல்லாமுரைக் கவருவாய்
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே. 7.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயாமுன் மரமீது பூபிஞ்சறுத்தனோ
கன்னியர்கள் பழிகொண்டனோ
கடனென்று பொருள்பறித்தே வயிறெரித்தனோ
கிளைவழியில் முள்ளிட்டனோ
தாயாருடன் பிறவிக் கென்னவினை செய்தனோ
தந்தபொரு ளில்லையென்றனோ
தானென்று கெர்வித்துக் கொலைகளவு செய்தனோ
தபசிகளை யேசினேனோ
வாயாரப் பொய்சொல்லி வீண்பொருள் பறித்தனோ
வாணரைப் பழித்திட்டனோ
வடவுபோலே பிறரைச் சேர்க்கா தடித்தனோ
வந்தபின் என்செய்தனோ
ஈயாத லோபியென்றே பெயரெடுத்தனோ
எல்லாம் பொறுத்தருளுவாய்
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே. 8.

தாயாரிருந்தென்ன தந்தையு மிருந்தென்ன
தன்பிறவி யுறவுகோடி
தனமலை குவித்தென்ன கனபெயரெடுத்தென்ன
தாரணியை யாண்டுமென்ன
சேயர்களிருந்தென்ன குருவாய்த் திரிந்தென்ன
சீஷர்கள் இருந்துமென்ன
சித்துபல கற்றென்ன நித்தமும் விரதங்கள்
செய்தென்ன நதிகளெல்லாம்
ஓயாது மூழ்கினும் என்னபலன் நமனோலை
ஒன்றினைத்தான் தடுக்க
உதவுமோ யிவையெலாம் சந்தையுறவென்று தான்
உன்னிருபதம் பிடித்தேன்
யார்மீதில் உன்மனம் இருந்தாலும் உன்கடைக்
கண்பார்வை அதுபோதுமே
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே. 9.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னமும் சொல்லவோ உன்மனங் கல்லோ
இரும்போ பெரும் பாறையோ
இருசெவியு மந்தமோ கேளாது அந்தமோ
இது உனக்கழகுதானோ
என்னென்ன மோகமோ இதுவென்ன சோபமோ
இதுவேஉன் செய்கைதானோ
இருபிள்ளைதாபமோ யார்மீதுகோபமோ
ஆனாலும் நான் விடுவனோ
உன்னைவிட் டெங்குசென்றாலும் விழலாவனான்
உனையடுத்துங் கெடுவனோ
ஓகோவிதுன்குற்ற மொன்றுமிலை
யுற்றுப்பார் பெற்றவையா
என்குற்ற மாயினும் உன்குற்ற மாயினும்
இனியருளளிக்க நினைவாய்
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே. 10.

சனிராகு கேதுபுதன் சுக்கிரன் செவ்வாய்
குரு சந்திரன் சூரியனிவரைச்
சற்றெனக்குள்ளாக்கி ராசிபனி ரெண்டையும்
சமமாய் நிறுத்தி யுடனே
பனியொத்த நட்சத்திரங்க ளிருபத்தேழும்
பக்குவப்படுத்திப் பின்னால்
பகர்கின்ற கிரணங்கள் பதினொன்றையும்
வெட்டி பலரையும் அதட்டி என்முன்
கனிபோல வேபேசிக் கெடுநினைவு நினைக்கின்ற
கசடர்களை யுங்கசக்கி கர்த்தனின்
தொண்டராம் தொண்டர்க்குத் தொண்டரின்
தொண்டர்கள் தொழும்பனாக்கி
இனியவள மருவுசிறு மணவைமுனி சாமியெனை
யாள்வதினி யுன் கடன்காண்
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே. 11.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களும் அறிந்து கொள்ளுங்கள்

## சுபகாரியங்களைச் செய்ய சுபநாட்களை நேரங்களை தேர்ந்தெடுப்பது எப்படி?

இன்னின்ன காரியங்களைச் செய்ய இன்னின்ன நேரங்களே பொருத்தமானது என நம் முன்னோர்கள் கணித்து வைத்திருக்கின் றார்கள். சிலவற்றை நாம் காரணமறியாமல் ஏற்றுக்கொண்டு அதன்படி பின்பற்றி வருகின்றோம்.

இந்தச் சுபநேரங்கள் பற்றி தமிழர்களாகிய நாம் மட்டும்தான் பெரிதாக நினைக்கின்றோமோ என்றால் இல்லை. உலகில் உள்ள எண்ணற்ற நாட்டவர்களும் பல்வேறு இனத்தவர்களும் சுபநேரங் களைத் தேர்ந்து எடுத்துத்தான் எந்தக் காரியங்களையும் செயல் படுத்துகின்றார்கள். விஞ்ஞானிகள் ராக்கெட் இயங்குவதில் இருந்து அரசியலில் பதவிப்பிரமாணம் வரை அனைத்துக்கும் சுபநேரங்கள் பார்க்கப்படுகின்றது.

ஒருவர் வாழ்க்கையில் வெற்றி பெற்றுவிட்டால் "எல்லாம் நேரம்தான்" அல்லது அவர்களுக்கு "நல்ல நேரம்" என்றும் கூறுகின்றோம். அந்த நல்ல நேரம் என்பது எது?

ஒருவன் வாழ்க்கையில் பல்வேறு சோதனைகளையும் துன்பங் களையும் அனுபவித்தால் "அவனுக்கு போதாத காலம்" "காலம் சரியில்லை" என்றும் கூறுகின்றோம்.

ஒருபெண் திருமணமாகி கணவன் வீட்டுக்கு வந்த பிறகு அந்த வீட்டிற்குச் செல்வமும் புகழும் வந்துவிட்டால் அவள் வந்த நேரம்; அவள் கால் வைத்த நேரம் என்று எல்லோரும் கூறிக் கொள்கின்றோம். அந்தச் சுபநேரங்களை அறிந்து நடப்பதுதான் எங்களது மரபுக் கொள்கைகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எந்தக் கிழமைகளில் என்ன காரியம் செய்யலாம்

**ஞாயிற்றுக்கிழமை:-**

வைத்தியரைச் சந்திக்க, சிகிச்சைபெற, மருந்து உண்ண, செல்வந்தர்களைப் பேட்டிகாண, சுபகாரியங்களுக்காக வெளியூர் செல்ல இந்தக் கிழமையில் அமைந்த சுபநேரங்களைப் பயன்படுத்தலாம்.

**திங்கட்கிழமை:-**

ஆபரணங்கள் வாங்க, புதிய ஆடைகள் அணிய, புதுக்கடை திறக்க, புதிய வியாபாரம் தொழில் துவங்க, மணப்பெண் பார்க்க, கடன் கேட்க, வழக்குகள் சம்பந்தமாக சட்ட ஆலோசனை பெற இந்தக் கிழமைகளில் அமைந்த சுபநேரங்களைப் பயன்படுத்தலாம்.

**செவ்வாய்க்கிழமை:-**

வைத்தியர்கள் அறுவைச் சிகிச்சை செய்ய, ஆயுதங்கள் செய்ய, வாங்க, இயந்திர சம்பந்தமான, மின்சாரம் சம்பந்தமான பொருட்கள் வாங்க, வீட்டுக்கு மின்சார தொடர்பு கொடுக்க (ரெலிபோன், ரீ.வி, றேடியோ) இந்தக் கிழமையில் அமைந்த சுபநேரங்களைப் பயன் படுத்தலாம்.

**புதன்கிழமை:-**

புதிய கலைகள் பயிலவும், கலைத்துறை சம்பந்தமான செயல்களில் ஈடுபடவும் புதிய கணக்குகள் எழுத, புத்தகம் வெளியிட, புது ஆபரணம் செய்ய, பொன்னுருக்க, கலைஞர்களைச் சந்திக்க, திரைப்படம் தொடங்க, ஆசிரியத் தொழில் பணியாற்ற இந்தக் கிழமையில் அமைந்த சுப நேரங்களைப் பயன்படுத்தலாம்.

**வியாழக்கிழமை:-**

புதிய பாடங்கள் படிக்க, கல்வி தொடர்புடைய புத்தகங்கள் வெளியிட, புதிதாக வேலை கேட்க, புதிய நபர்களை மேலதிகாரிகளைச் சந்திக்க, கடன் கேட்டுப் பெற, பெற்ற கடனைத் திருப்பிக் கொடுக்க (கடன் தீர்க்க), தையல்கடை திறக்க, புது ஆடைகள் வாங்க இந்தக் கிழமையில் உள்ள சுபநேரங்களைப் பயன்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெள்ளிக்கிழமை:-**

சுபகாரியங்களைப் பற்றிப் பேச, சுபகாரியங்களை நிச்சயம் செய்ய, கட்டட வேலைகள் ஆரம்பிக்க, புடவைக் கடைகள், நகைக் கடைகள், அலங்காரப் பொருட்கடைகள், வாசனைத் திரவியப் பொருட்கள் சம்பந்தமான கடைகள், தொழில்கள் துவங்க, கோவில் கட்ட, திருப்பணி ஆரம்பிக்க, வங்கியில் புதுக்கணக்கு ஆரம்பிக்க, புது வீட்டுக்கு குடிபுகுதல் போன்ற நல்ல காரியங்களுக்கு இந்தக் கிழமையில் அமைந்த சுபநேரங்களைப் பயன்படுத்தலாம்.

**சனிக்கிழமை:-**

சுபகாரியங்களுக்காக வெளியூர் புறப்பட தோட்டம், விறகு, சிமெண்ட், செங்கல், மணல் மற்றும் ஜல்லி வியாபாரம் தொடங்க, மதுபானக் கடைகள் திறக்க, சோடா, குளிர்பானம் வியாபாரம் ஆரம் பிக்க, விளம்பரப் போர்டுகள், விளம்பரக் கம்பனிகள் ஆரம்பிக்க, புதிதாக வெண்கல அலுமினியப் பாத்திரங்களை வார்ப்படம் செய்ய, சிலைகள் செய்ய, கட்டட பிளாட்டுகள் உருவாக்க, லோன்றிக் கடைகள் திறக்க ஆகிய காரியங்களுக்கு இந்தக் கிழமையில் அமைந்த சுபநேரங்களைப் பயன்படுத்தலாம்.

## எந்த ஓரையில் என்ன காரியம் செய்யலாம்

**சூரிய ஓரை:-**

அரசியல் சம்பந்தமான விவகாரங்கள், குற்ற ஆய்வுகள், திருட்டுக்கள் சம்பந்தமான விசாரணைகள் இவை தவிர வேறு காரியங் களைத் தவிர்க்கவும்.

**சந்திர ஓரை:-**

வளர்பிறைச் சந்திரனால் காரியங்கள் உடனே நடக்கும். தேய் பிறைச் சந்திரனால் காரியங்கள் தாமதமாக நடக்கும். புதுவீடு பார்த்தல், பிரயாணம், பசு, மாடு, ஆடு, கோழி வளர்க்க, பூச்செடி மரங்கள் வைத்தல், ஆபரணங்கள் வாங்குதல், திருமணப் பெண்ணை அலங்கரித்தல், மணப்பந்தல் அமைத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செவ்வாய் ஓரை:-**

மின்சார இணைப்புக்கள் கொடுக்க, எரிபொருட்கள் மொத்த விலைக்கு வாங்க, பழைய கட்டடங்கள் இடிக்க இந்த ஓரை பொருத்தமாக இருக்கும்.

**புதன் ஓரை:-**

கல்வி பயில, கணக்குகள் முடிக்க, புதுமனை வாங்க, நிலம் வாங்க, ஓவியம், விஞ்ஞானம், உடல்நலம் பற்றிய நூல்கள் வெளியிட, வைத்தியரை, சோதிடரைச் சந்திக்க, ஆலோசனைகள் பெற, ஒப்பந்தங்கள் செய்ய இந்த ஓரை பொருத்தமாக இருக்கும்.

**வியாழ ஓரை:-**

குழந்தைகள் சம்பந்தமான காரியங்களில் ஈடுபட, உடன்பிறந்த சகோதரர்களைக் காண, பொன் ஆபரணம் வாங்க, குரு உபதேசம் பெற, சாஸ்திரம், சம்பிரதாயம் பற்றி மார்க்க நூல்கள் வெளியிட இந்த ஓரை பயன்படும்.

**சுக்கிர ஓரை:-**

நாகரிகப் பொருட்கள், புடவை, நகைக் கடைகள் ஆரம்பிக்க, திரைப்படம், ஓவியம், இசை பயிற்சி சம்பந்தமான கலைக் கூடங்கள் திறக்க, காதலர் சந்திக்க, பெண்கள் விவகாரம் பற்றிப் பேச இந்த ஓரை பயன்படும்.

**சனி ஓரை:-**

சனி, செவ்வாய் ஓரைகள் கொடிய ஓரைகள். இதில் விபத்துக்களும் மரணங்களும் ஏற்படும். இந்த ஓரை சிறையில் இருப்பவர்களைச் சந்திக்க, இரும்புப் பொருட்கள் வாங்க, வேட்டையாட, நெடுநாள் பகைவரை சமாதானப்படுத்த ஓரை பயன்படும்.

**இராகு காலம்:-**

ஒவ்வொருநாளும் இராகுகாலம் வருகிறது. இராகுகாலம் என்றால் என்ன? என்ற விபரங்கள் நம்மில் பலருக்குத் தெரியாது. இந்த இராகுகாலத்தில் துர்த் தேவதைகளை வழிபடவும் நாக தோஷம் உள்ளவர்கள் வழிபடவும் பயன்படும். இந்த ராகு காலத்தில் எத்தகைய காரியங்களையும் செய்வது நல்லதல்ல.

ராகு காலத்தில் செய்யப்படும் நல்ல காரியம் பிறகு தீய காரியமாக மாறிவிடுகிறது. எவருக்காவது உதவி செய்தால் அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்கு ஆபத்தாக முடிகிறது. உணவு அருந்தினால் அது வயிற்றில் விஷமாகி நோய்களை உண்டுபண்ணுகிறது. ராகு காலத்தில் ஏற்படும் நட்பு, சினேகிதம் எல்லாம் விரோதமாக மாறுகின்றது.

**எமகண்டம்:-**

இதுவும் ராகு காலத்தைப் போலவே இந்த எமகண்ட காலத்திலும் எந்த ஒரு சுபகாரியங்களையும் செய்யக் கூடாது. அதில் செய்யும் காரியங்கள் ஆபத்தையும் தோல்வியையும் தரும்.

**யோகங்கள்:-**

சித்த யோகம், அமிர்த யோகம், மரண யோகம், பிரபலாரிஷ்ட யோகம் ஆகிய நான்கு பிரிவுகள் கொண்டது. இதில் சித்தயோகம், அமிர்த யோகம் நன்மைகளைத் தருபவை.

**பிரபலாரிஷ்ட யோகம்:-**

ஞாயிற்றுக்கிழமையும் பரணி நட்சத்திரமும் சேர்ந்தால் பரணி நட்சத்திரம் முடியும் வரையிலும்.

திங்கட்கிழமையும் சித்திரை நட்சத்திரமும் சேர்ந்தால் அந்த சித்திரை நட்சத்திரம் முடியும் வரையிலும்.

செவ்வாய்க்கிழமையும் உத்தராட நட்சத்திரமும் சேர்ந்தால் அந்த உத்தராட நட்சத்திரம் முடியும் வரையிலும்.

புதன்கிழமையும் அவிட்ட நட்சத்திரமும் சேர்ந்தால் அந்த அவிட்ட நட்சத்திரம் முடியும் வரையிலும்.

வியாழக்கிழமையும் கேட்டை நட்சத்திரமும் சேர்ந்தால் அந்த கேட்டை நட்சத்திரம் முடியும் வரையிலும்.

வெள்ளிக்கிழமையும் பூராடமும் சேர்ந்தால் அந்த பூராட நட்சத்திரம் முடியும் வரையிலும்.

சனிக்கிழமையும் ரேவதி நட்சத்திரமும் சேர்ந்தால் ரேவதி நட்சத்திரம் முடியும் வரையிலும் பிரபலாரிஷ்ட காலமாகும். இந்த நாட்களில் எந்த ஒரு சுப காரியங்களையும் செய்யக் கூடாது. அப்படி செய்வதால் எதிர்பாராத ஆபத்துக்களும் நஷ்டமும் தோல்வியும் ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுப காரியங்களுக்கு பயன்படாத மாதங்கள்:-

ஒரு மாதத்தில் இரண்டு அமாவாசையாவது இரண்டு பௌர்ண மியாவது வந்தால் மலமாதம் எனப்படும். இந்த மலமாதத்தில் எந்த ஒரு சுபகாரியமும் செய்யக்கூடாது.

## சுபகாரியங்களுக்கு பயன்படாத திதி:-

எந்த நல்ல காரியங்களையும் அட்டமி திதி, நவமி திதியில் செய்யக் கூடாது. செய்தால் பொருள் நட்டமும் விரோதமும் நோயும் ஏற்படும்.

## 27 நட்சத்திரங்கள் செய்யும் சுப காரியங்கள்

**அச்சுவினி:-**

திருமணம் செய்ய, மாங்கல்யம் செய்ய, கல்வி ஆரம்பம், ஆபரணம், புது ஆடைகள் அணிய, கடற் பயணம் செய்ய, தானியம் வாங்க, ஆடுமாடு வாங்க, வியாதியஸ்தர் மருந்துண்ணவும் ஏற்றது.

**பரணி:-**

வியாதியஸ்தர் குளிப்பதற்கு, புது அடுப்பு வைக்க, தானியம் சேமிக்க, கதிர் அறுக்க, ஆயுதப் பிரயோசம் செய்ய, மூலிகைகளை உபயோகிக்கவும் ஏற்றது.

**கார்த்திகை:-**

கடன்தீர்க்க, கால்வாய், சுரங்கம் வெட்ட, ஆயுதப் பிரயோகம் செய்ய ஏற்றது.

**ரோகினி:-**

பெயர் சூட்ட, சீமந்தம் செய்ய, கல்வி ஆரம்பிக்க, முடிசூட்ட, விவாகம் செய்ய, தானியம் வாங்க, வாகனங்கள் ஓட்டப் பயிற்சி பெற, ஆயுதப் பயிற்சி பெற, புதுமனை குடிபுக, வெளியூர் போக, மாங்கல்யம் செய்யவும், குழந்தையை தொட்டிலில் போடுவதற்கும் நோயாளி சிகிச்சை மேற்கொள்ளவும் ஏற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மிருகசீரீடம்:-**

சீமந்தம், உபநயனம் செய்ய, புது ஆபரணம் அணிய, திருமணம் செய்ய, காதுகுத்த, கிணறு, குளம் வெட்ட ; கடலில் பயணம் செய்ய, ஆடு மாடு வாங்க ஏற்றது.

**திருவாதிரை:-**

தானியங்கள் சேமிக்க, குழந்தையை தொட்டிலிற் போட, வியாதியஸ்தர்கள் குளிக்க இந்த நாள் ஏற்றது.

**புனர்பூசம்:-**

வெளியூர் செல்ல, நோயாளிகள் சிகிச்சைபெற, தானியங்கள் சேமிக்க, திருமணம் செய்ய, புத்தாடை வாங்க, கட்டடப் பொருட்கள் வாங்க, பயிர் செய்ய, காது குத்த, கல்வி ஆரம்பிக்க இந்த நாள் ஏற்றது.

**பூசம்:-**

கல்வி ஆரம்பிக்க, பயிர்த் தொழில் செய்ய, திருமணம், சீமந்தம், உபநயனம் செய்ய, புதுமனைபுக, குழந்தையை தொட்டிலில் போடவும் குரு உபதேசம் பெறவும் ஏற்றது.

**ஆயிலியம்:-**

நவக்கிரக சாந்தி செய்தல், மாந்திரீக காரியம் செய்யவும் ஆயுதப் பயிற்சி பெறவும் ஏற்றது.

**மகம்:-**

திருமணம் செய்யவும் விதை விதைக்க, பயணம் செய்ய, கிணறு, குளம் வெட்ட, ஆடு, மாடு வாங்க, தானியங்கள் வாங்க ஏற்றது.

**பூரம்:-**

சித்திரம் எழுத, கிரகதோஷ நிவர்த்தி செய்ய, ஆயுதப் பயிற்சி பெற, அலங்காரப் பொருட்கள் வாங்க ஏற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உத்தரம்:-**

பெயர் சூட்ட, விவாகம், சீமந்தம், உபநயனம் செய்ய, காது குத்த, கல்வி ஆரம்பிக்க, புதுமனை புக, அரசாங்க அதிகாரிகளைச் சந்திக்க, வேத பயிற்சி பெற, தேவ பிரதிட்டை செய்ய ஏற்றது.

**அத்தம்:-**

விவாகம், சீமந்தம், உபநயனம் செய்ய, பெயர் சூட்ட, புதுமனை புக, கல்வி ஆரம்பிக்க, வியாபாரம் ஆரம்பிக்க, கிணறு வெட்ட, கும்பாபிஷேகம் செய்ய, விருந்துண்ண ஏற்றது.

**சித்திரை:-**

மின்சாரப் பொருட்கள், எரிபொருட்கள் வாங்க, விவாகம், உபநயனம், சீமந்தம் செய்ய, பெயர் சூட்ட, கல்வி ஆரம்பம், வேத பயிற்சி பெற, தேவ பிரதிஷ்டை செய்ய ஏற்றது.

**சுவாதி:-**

விவாகம், உபநயனம், சீமந்தம் செய்ய, பெயர் சூட்ட, சோதிடம், வைத்தியம், சங்கீதம், சாத்திரம் ஆரம்பிக்க, வாகனம் வாங்க, புதுமனை புக, புதுக்கடை கட்ட, புத்தகம், பத்திரிகை பிரசுரம் செய்ய ஏற்றது.

**விசாகம்:-**

விவசாய அறுவடை செய்ய, இரசாயனப் பொருட்கள் வாங்க, மருத்துவமனை திறக்க, புது வாகனங்கள் உபயோகிக்க, குளிர் சாதனப்பெட்டி, அரைக்கும் இயந்திரம் போன்றவை பாவனைப் படுத்த ஏற்றது.

**அனுஷம்:-**

மந்திர உபதேசம் பெற, புதுமனை புக, கல்வி ஆரம்பிக்க, புத்தாடை, புது ஆபரணம் அணிய, கடற் பயணம் செய்ய, நோயாளி சிகிச்சை பெற, பிரயாணம் செய்ய, விவசாய அறுவடை செய்ய ஏற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேட்டை:-**

வியாதியஸ்தர் குளிக்க, கிணறு வெட்ட, ஆயுதப் பிரயோகம் செய்ய, கடன் வாங்க ஏற்றது.

**மூலம்:-**

விவாகம், சீமந்தம் செய்ய, விருந்துண்ண, புதுமனை புக, வியாதியஸ்தர் குளிக்க, பெயர் சூட்ட, ஆபரணம் அணிய ஏற்றது.

**பூராடம்:-**

ஆயுதப் பிரயோகம் செய்ய, கணிதாரம்பம் செய்ய, கடன் தீர்க்க, வியாதியஸ்தர் குளிக்க, ஆடு மாடு வாங்க ஏற்றது.

**உத்தராடம்:-**

விவாகம், சீமந்தம், உபநயனம் செய்ய, காது குத்த, பெயர் சூட்ட, கல்வி ஆரம்பம் செய்ய, ஆபரணம் அணிய, புது ஆடைகள் அணிய, விருந்துண்ண ஏற்றது.

**திருவோணம்:-**

விவாகம், உபநயனம், சீமந்தம் செய்ய, காது குத்த, கல்வி ஆரம்பம் செய்ய, பெயர் சூட்ட, விதைவிதைக்க புண்ணிய தீர்த்தம் ஆட, கும்பாபிஷேகம் செய்ய, ஆடை, ஆபரணம் அணிய ஏற்றது.

**அவிட்டம்:-**

புதுமனை புக, திருமணம் செய்ய, பெயர் சூட்ட, காதுகுத்த, விருந்துண்ண, ஆபரணம் அணிய, கல்வி ஆரம்பம் செய்ய, சங்கீத ஆரம்பம், வியாபாரம் செய்ய, தீர்த்த யாத்திரை செய்ய ஏற்றது.

**சதயம்:-**

பெயர் சூட்ட உபநயனம் செய்ய, கல்வி ஆரம்பம், வீடு, நிலம் வாங்க, கணக்கு முடிக்க, கொமிசன் வியாபாரம், வட்டிக்கடை ஆரம்பிக்க ஏற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பூரட்டாதி:-**

மந்திர வேலை செய்ய, பழைய கட்டிடங்களை இடிக்க, பழையவற்றை அழித்துப் புதுப்பொருட்கள் செய்ய ஏற்றது.

**உத்தரட்டாதி:-**

திருமணம், சீமந்தம், உபநயனம் செய்ய, புதுமனை கட்டுதல் புகுதல், பெயர் சூட்ட, காது குத்த, விவசாய வேலைகள் செய்ய, தானியங்கள் வாங்க, விற்க நோயாளர் சிகிச்சை பெற ஏற்றது.

**ரேவதி:-**

பெண் பார்க்க, கல்வி பயில, வாகனம் வாங்க, வெளியூர் பிரயாணம் செய்ய, திருமணம், உபநயனம், சீமந்தம் செய்ய, புதுக்கடை திறக்க, வாகனம் வாங்க, ஆபரணம் செய்ய, பெயர் சூட்ட ஏற்றது.

மேற்கூறிய முறைப்படி அந்தந்த நட்ஷத்திரத்தில் செய்வதற்கு ஏற்ற செயல்களை சுபயோக சுபதினத்தில் செய்து சிறப்புடன் வாழலாம்.

## சுப சகுனங்கள்

சகுனம் என்பது ஒருவகைச் சோதிடமே. எனினும் சோதிடத் திற்கும் சகுனத்திற்கும் வேறுபாடுகள் உண்டு. சோதிடம் என்பது பிறரிடம் கேட்டு அறிவது. சகுனம் என்பது ஒருவர் தமக்கு தாமே பார்த்துக்கொள்வது. சோதிடம் என்பது பிறந்த நாள், நேரம், ஊர் முதலியவற்றைக் கொண்டு கிரக நிலைகளால் கணிக்கப்படுவது. சகுனம் என்பது இயற்கை நிகழ்ச்சிகளால் காணப்படுவது. சகுனம் இயற்கையால் நிகழ்வது. சோதிடத்தில் தவறு ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உண்டு. பிறந்த நேரத்தில் தவறுதல் ஏற்பட்டால் கிரக நிலைகளும் அதற்கான பலன்களும் மாறுபட்டு விடுகின்றன. சோதிடப் பலன்கள் சரியாக நடக்காவிட்டால் சோதிடர்களை பழித் துப் பேசுவாரும் உண்டு. இது முறையன்று. சோதிடப் பலன் தவறு வது சோதிடருடைய தவறு என்று கருதக் கூடாது. நேரத்ததைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரிவர எடுக்காதது தவறாக இருக்கலாம். ஆனால் நேரம் சரியாக எடுத்தும் சோதிடர் கணிக்கும் போது ஏற்படும் தவறுகளுக்கு சோதிடரே காரணம். இப்படி இரண்டு வகையான தவறுகள் சோதிடத்தில் ஏற்பட வாய்ப்புண்டு. ஆனால் சகுன முறையில் இத் தவறுதலுக்குச் சிறிதும் இடமில்லை. சகுனங்கள் காணப்படுகின்ற நிகழ்ச்சிகள் உணர்த்தும் பலன்கள் தவறுவதும் இல்லை. பொய்த்துப் போவதும் இல்லை. சகுனங்கள் பின்விளையப் போவதை முன் காட்டும் கண்ணாடி ஆகும்.

## சகுனம் பார்க்கப்படும் நிலைகள்

சகுனம் என்பது சிந்தனை நிலை, சொல்நிலை, செயல் நிலை என மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

**சிந்தனை நிலையானது:-**

நாம் ஒரு பொருள் பற்றியோ, செயல் பற்றியோ சிந்தித்துக் கொண்டிருக்கும்போது சகுன நிகழ்ச்சி நிகழ்வதுண்டு. பல்லிச் சகுனம், வாய்மொழிச் சகுனம் நிகழ்வதுமுண்டு.

**சொல் நிலையானது:-**

நாம் ஒரு செயல் பற்றியோ பொருள் பற்றியோ பிறரோடு கலந்து உரையாடிக் கொண்டிருக்கும்போது நிகழ்வதும் உண்டு.

**செயல் நிலையானது:-**

நாம் ஒரு செயலின் பொருட்டோ, ஒரு பொருளின் பொருட்டோ புறப்படும் போது வழியில் எதிர்ப்படுகின்ற கேட்கப்படுகின்ற சகுனங்களைக் கொண்டு பயணத்தின் வெற்றி தோல்விகளை நிர்ணயம் செய்து அதன்படி பிரயாணத்தைத் தொடங்குவதா நிறுத்துவதா எனத் தீர்மானிக்கலாம்.

**கருடன்:-**

நாம் ஒரு செயலின் நிமித்தம் எமது இருப்பிடத்திலிருந்து புறப்படப்போகும் போது கருடன் சகுனம் காண்பது நல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருடன் ஒரு வெற்றிப் பறவை. கருடன் குரல் கேட்டால் அது நமது வெற்றியின் முழக்கம். எம்மைக் கருடன் எதிர்கொண்டு வந்தால் வெற்றி எம்மை வந்து அடையும் என்றும் எந்த வகையிலும் கருடன் சகுனம் காண்பது நன்மையே.

**நாய்:-**

நாம் பயணத்தைத் தொடங்கும்போது நாய் ஓடிவந்து நமது காலை முகர்ந்தாலும், முன்னால் ஓடினாலும் நமது முகத்தைப் பார்த்து கொஞ்சுவதுபோல குரைத்தாலும் மிகவும் நல்லது. முகர்ந்து பார்ப்பது வெற்றி உண்டு என்பதும் முன்னாக ஓடுதல் பயணத்தை விடாது தொடரலாம் என்பதும் கொஞ்சுவது போல குரைப்பது பிரயாணம் மகிழ்ச்சியுடன் வெற்றி கிடைக்கும் என்றும் எண்ணலாம். நாம் நாயை அடித்துத் துரத்தினாலும் போகாது பெருங்குரலில் குரைத்தால் தீது. இது எமக்கு பயணத்தில் பொருள் நட்டமும் துன்பமும் உண்டு என்பதாகும். எனவே பயணத்தை நிறுத்துதல் நன்றாகும்.

**மாங்கலியப் பெண்:-**

நாம் பயணத்தைத் தொடங்கும்போது மாங்கலியப் பெண்ணை எதிர்கொள்வது காண்பது நல்லது. நமது பயணத்தினால் நன்மையும் செல்வமும் மகிழ்ச்சியும் உண்டாம். எனவே பயணத்தை மகிழ்வோடு தொடரலாம்.

**வண்ணான்:-**

நமது பயணத்தின்போது வண்ணானைக் காண்பது நல்லது. அவன் உடை அழுக்கினைப் போக்குவதில் வெற்றி பெறுவது போல் எமது பயணத்திலும் வெற்றி கிடைக்கும்.

**அரசன்:-**

பயணத்தின்போது அரசரைக் காண்பதோ எதிர் கொள்வதோ மிகவும் நல்லது. பயணத்தில் வெற்றியும் புகழும் செல்வமும் மதிப்பும் உண்டாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அழுக்கு மூட்டை:-**

பயணத்தின்போது அழுக்கு மூட்டையைக் காண்பது நல்லது. இந்த சகுனம் இதுவரை நமக்கு இருந்த துன்பங்கள் எல்லாம் இந்தப் பயணத்தால் நீங்கிவிடும் என்பதாகும்.

**நீர்க்குடம்:-**

பயணத்தின்போது நீர்க்குடம் காண்பது நல்லது. இச் சகுனத் தால் வாழ்வில் வளம் பெருகி நிறைந்த இன்பம் உண்டாகும்.

**திருவிழா:-**

பயணத்தின்பொழுது திருவிழாவினைக் கண்டால் பிறர் வியந்து பாராட்டும் வகையில் வெற்றி உண்டாகும்.

**எருக்கூடை:-**

பயணத்தின்போது எருக்கூடையை, வண்டியைக் காண்பது பயணத்தினால் துன்பங்கள் நீங்க வழி பிறக்கும் என்பதாகும்.

## பயணத்தில் காணத்தக்கவை

நாம் பயணத்தை மேற்கொள்ளும்போது மலர், தீபம், சங்கு, மஞ்சள் குடை, விசிறி, வளையல் கிளி, மான், பால், பழம், இளநீர், பசு, சாணம், இரட்டைப் பிராமணர்கள், பல்லக்கு, கண்ணாடி, மாவிலை, வெண்ணெய், தயிர், சந்தனம், கொடி, மயில், யானை, தேர், வெள்ளரசமரம், பலகாரக் கூடை, பூஞ்செடிகள் ஆகியவற் றைக் காணலாம். இவற்றைக் காண்பதால் நல்ல பலன்கள் உண்டாகி வாழ்வும் வளமும் வசதியும் பெருகும்.

**வலப்பக்கச் சகுனம்:-**

நாம் பயணம் மேற்கொள்ளும் போது பசு, புலி, யானை, முயல், கோழி, நாரை, மான், சுமங்கலி, கொக்கு ஆகியன வலப்பக்கமாக வந்தால் நமக்கு வெற்றி உண்டாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இடப்பக்கச் சகுனம்:-**

நாம் பயணம் மேற்கொள்ளும்போது காட்டு எருமை, பன்றி, கரடி, குரங்கு, நாய், பூனை, உடும்பு, கீரி, ஆட்டுக்கடா ஆகியவை இடப்பக்கம் வந்தால் நல்ல சகுனம்.

**அபசகுனங்கள்:-**

அபசகுனம் என்பது பயணத்தில் காணத்தகாத தீய சகுனங்கள் ஆகும். இவற்றைக் காணுவதால் பலவகையான தீங்குகளை பொருள் நட்டம், வீண்பழி, நம்பிக்கை மோசடி என்பன உண்டாகும். எனவே ஒரு காரியத்தை எண்ணும்போதோ, முயற்சி செய்யும் போதோ தீய சகுனங்களைக் கண்டால் எமது முயற்சியையோ, எண்ணத்தையோ கைவிட்டுவிட வேண்டும்.

**ஒற்றை விதவை:-**

நாம் ஒரு காரியத்தின் பொருட்டு புறப்படும் போது விதவை ஒருத்தியைக் கண்டால் எண்ணம் நிறைவேறாது. அப்படி நிறை வேறினாலும் அதில் மோசடிகளும் நஷ்டமும் பகையும் ஏற்படும்.

**ஒற்றைப் பிராமணர்:-**

எமது பிரயாணத்தின்போது ஒற்றைப் பிராமணரைக் காண்போமானால் நமது பிரயாணத்தால் நல்ல பலன் கிட்டாது. எமது எண்ணம் நிறைவு பெறாது. பொருள் இழப்பும் ஏற்படும். எனவே பிரயாணத்தை கைவிட வேண்டும்.

**மொட்டைத் தலையர், தலைவிரித்தவர்:-**

இவர்களை நமது பிரயாணத்தின் போது கண்டால் பொருள் இழப்பு, துன்பமும், தொல்லையும் வந்து சேரும்.

**எண்ணெய்ப் பானை *(பாத்திரம்)*:-**

பயணத்தின்போது எண்ணெய்ப்பானையைக் கண்டால் உடல் நலம் கெடும். நோயும் துன்பமும் உண்டாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**போர்வீரன்:-**

எமது பிரயாணத்தின்போது போர்வீரனைக் காண்பது கூடாது. அப்படிக் கண்டால் கருதிச் செல்லும் கடமை, காரியத்தில் வீண் சிக்கலும் தகராறும் உண்டாகும்.

**ஐயையோ என்ற ஓசை:-**

யாதொரு காரியத்தை முன்னிட்டும், பயணம் மேற்கொள்ளும் போது ஐயையோ என்ற ஓசை கேட்டால் கெடுதல் உண்டாகும் என்பதால் பயணத்தை கைவிடவேண்டும்.

## காணத்தகாத சகுனம்

நாம் பயணத்தை மேற்கொள்ளும்போது சந்நியாசி, காவி வஸ்திர தாரி, விதவை, வேசியின் பிள்ளை, ஈரவஸ்திரதாரி, அலி, சத்துரு, ஏழை, மலடன், நோயாளி, கொலைஞர், மூக்கறையர், குருடர், ஊமர், நொண்டி, ஏணி, விறகு, புதுப்பானை, உப்பு, பஞ்சு, வெறும் பாத்திரம், எண்ணெய்க்குடம், புகை நெருப்பு, சிவந்த புஷ்பம், அகால மழை, இடிமின்னல், பெருங்காற்று, அழுகுரல், அபானவாயு பறிதல், கால்இடறல், தலைதட்டல், சரீரம் நடுங்குதல், வஸ்திரம் உரிதல், கத்தி, கோடரி, குரங்கு, பாம்பு, ஆடு, களுதை, குரைக்காத நாய், எருமைக்கடா, பன்றி இவற்றைக் கண்டால் காரியம் கைகூடாது கஷ்டங்கள் ஏற்படும்.

## விலங்குச் சகுனம்

**நாய்:-**

நாம் பயணத்தை மேற்கொள்ளும்போது நாய் வலப்பக்கத்தில் இருந்து இடப்பக்கம் செல்வது நல்லது. நமக்கு எதிரில் நாய் வருவதும் நல்லது. எமது செருப்பை நக்கினால் நாம் பயணம் மேற்கொள்ள நேரிடும். எம்மிடம் செருப்புத்துண்டு ஒன்றை வாயில் கடித்துக்கொண்டு ஓடிவந்தால் காரியம் நிறைவேறும். வாய் நிறைய மாமிசத் துண்டை கடித்துக்கொண்டு வந்தால் தனலாபம் உண்டு. பச்சை எலும்புத்துண்டைக் கடித்துக்கொண்டு வந்தால் அதிஷ்டம் வந்துசேரும். நாம் பயணம் செய்யும்போது போகவிடாமல் தடுத்தால் வழியில் திருடர்கள் தொல்லை, எதிரிகள் தொல்லை வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரும். காய்ந்த எலும்பைக் கவ்விக்கொண்டு வந்தால் மரணம் ஏற்படும். வாயில் கயிற்றைக் கவ்விக்கொண்டு வந்தால் சிறைவாசம் கிடைக்கும். தானியக் களஞ்சியத்தில் மீது நின்றுகொண்டு நிலத்தைக் கீறினால் தானிய விளைவு அதிகமாகும். வீட்டில் சுவரைக் கீறினால் திருடர் பயம், மாட்டுக் கொட்டகையில் குழி தோண்டினால் மாடுகளைத் திருடர்கள் கொண்டுபோவார், வீட்டில் உள்ள நாய் கண்ணீர் விட்டுக்கொண்டே சோற்றை உண்டால் எஜமானுக்கு துன்பம் உண்டாகும். வீட்டுக்கு வெளியில் நின்று கொண்டு தலையை மட்டும் வீட்டுக்குள் நீட்டிக்கொண்டு குரைத்தால் வீட்டுக்காரருக்கு நோய்கள் வரும். வீட்டுக்குள் இருந்து வெளியே தலையை நீட்டிக்கொண்டு குரைத்தால் வீட்டுக் காரிக்கு மானபங்கம் ஏற்படும்.

உதயசூரியனை நோக்கி குரைத்தால் அக்கினி பயம். மாலை நேரத்தில் அப்படிக் குரைத்தால் குடியானவர்களுக்கு கேடு வரும். மழைகாலத்தில் குப்பை மேட்டில் நின்று குரைத்தால் மழை வரும். கோடைகாலத்தில் இப்படிக் குரைத்தால் கொடிய நோய்கள் பரவும். இப்படி பலவகையான சகுனங்களை நாய்மூலம் அறிந்து கொள்ளலாம்.

**பூனைச் சகுனம்:-**

நாம் படுக்கையை விட்டு எழுந்திருக்கும்போது எதிரில் பூனையைக் கண்டால் அன்று நாம் செய்யும் காரியமெல்லாம் பயனற்றதாகிவிடும். காரியங்களைச் செய்ய முற்படும் போதும் பிரயாணத்தின் போதும் பூனையைக் கண்டால் காரியம் கெட்டுவிடும். ஆனால் நாம் ஒரு காரியத்தைப் பற்றி ஆலோசனை செய்யும்போது அல்லது பயணத்தை மேற்கொள்ளும்போது எமக்கு மேற்கு பக்கத்தில் இருந்து பூனை கத்துவது நல்லது.

**பாம்புச் சகுனம்:-**

ஒருவர் தனது வீட்டிற்குள் பாம்பு புகுவதைக் கண்டால் அவருக்கு தனலாபம் உண்டு. வீட்டில் இருந்து வெளியே போவதைக் கண்டால் தரித்திரம் வந்துசேரும். பயணத்தின்போது வலப்பக்கத்தில் இருந்து இடப்பக்கம் சென்றால் பணம் பொருள் வந்து சேரும், காரியம் வெற்றி பெறும். ஆண் பெண் பாம்புகள் பின்னிப்பிணைந்து கொண்டு இருக்கும்போது கண்டால் குடும்ப வாழ்க்கையில் மகிழ்ச்சி உண்டாகும். பசுமையான மரத்தில் ஏறுவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டால் கண்டவர் அரசபதவி பெறுவர். இரண்டு பாம்பு ஒன்றோ டொன்று சீறிப் பாய்ந்து சண்டை பிடித்தால்- நண்பர்களிடையே பகைமை உண்டாகும். பயணத்தின்போது இடப்பக்கம் எதிரில் சென்றால் கெடுதல் உண்டாகும்.

**பல்லிச் சகுனம்:-**

மனிதர்களால் பார்க்கப்படும் சகுனங்களில் பல்லிச் சகுனம் முதன்மையானதும், முக்கியமானதும் ஆகும். அன்றாடம் பார்க்கப்படும் பல்லிச் சகுனம் இரு வகைப்படும். அவை பல்லி சொல்லுதல், பல்லி விழுதல் ஆகும்.

## பல்லிசொற் பலன்

2 முறை சொன்னால் மரணம்
3 முறை சொன்னால் உறவு
4 முறை சொன்னால் சொந்தசாவு
5 முறை சொன்னால் சண்டை
6 முறை சொன்னால் புதிய உறவு
7 முறை சொன்னால் துன்பம், நோய்
8 முறை சொன்னால் சுபகாரியம்
9 முறை சொன்னால் மகிழ்ச்சி
10 முறை சொன்னால் சண்டை, துயரம்
11 முறை சொன்னால் யாத்திரை
12 முறை சொன்னால் திருமணம்
13 முறை சொன்னால் பொருள்வரவு
14 முறை சொன்னால் சாவுச்செய்தி
15 முறை சொன்னால் உறவினர் வரவு
16 முறை சொன்னால் நல்ல யோகம்

## பல்லி விழும் பலன்

| | | |
|---|---|---|
| சிரசில் | – | மரணம் |
| வலதுகாதில் | – | நன்மை |
| நெற்றியில் | – | பட்டாபிஷேகம் |
| மூக்கில் | – | நோய் |
| கழுத்தில் | – | மகிழ்ச்சி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| மார்பில் | – | நோய் |
| இடதுகையில் | – | மரணம் |
| வலக்கையில் | – | பெருமரணம் |
| வயிற்றில் | – | தானியலாபம் |
| முதுகில் | – | பெருநாசம் |
| முழங்காலில் | – | கலகம் |
| தொடையில் | – | நோய் |
| பாதத்தில் | – | துக்கம் |
| பாதவிரல்களில் | – | இராசபயம் |
| உடம்பில் ஓடினால் | – | தீர்க்காயுள் |

## திக்கு பலன்

| திக்கு | ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|---|
| கிழக்கு | பயம் | லாபம் | செல்வம் | மகிழ்ச்சி | துன்பம் | சுபம் | கீர்த்தி |
| தெ.கிழக்கு | தீமை | கலகம் | வரவு | லாபம் | சாக்கேன் | கீர்த்தி | லாபம் |
| தெற்கு | சுகம் | பகை | துக்கம் | பீடை | லாபம் | வரவு | மகிழ்ச்சி |
| தெ.மேற்கு | வரவு | சஞ்சலம் | பகை | சாக்கேன் | அனுகூலம் | புகழ் | நோய் |
| மேற்கு | கலகம் | களிப்பு | அனுகூலம் | பயம் | கஷ்டம் | மகிழ்ச்சி | வரவு |
| வ.மேற்கு | லாபம் | துக்கம் | புதுமை | நாசம் | கீர்த்தி | உட்பகை | யோகம் |
| வடக்கு | தனவரவு | வரவு | பயம் | சுகம் | தீமை | கலகம் | புகழ் |
| வ.கிழக்கு | மகிழ்ச்சி | கீர்த்தி | வாகனம் | நஷ்டம் | போசனம் | பகை | சோரபயம் |
| ஆகாயம் | வெற்றி | கேடு | பிரயாணம் | கீர்த்தி | கலகம் | வரவு | நஷ்டம் |
| பூமி | | | லாபம் | செல்வம் | சஞ்சலம் | நீராடல் | சித்தி |

**தேங்காய்ச் சகுனங்கள்:-**

தேங்காய் சகுனம் பார்க்க விரும்புவோர் ஒரு நல்ல தேங்காயை எடுத்துக்கொண்டு விநாயகப்பெருமான் திருக்கோவிலுக்குச் சென்று அப்பெருமானை வணங்கி வழிபட்டுக்கொண்டு தேங்காயை உடைப்பார்கள். அப்படி உடைக்கும் போது உடையப்பட்டுள்ள விதம்தான் சகுனங்களாக அமையும். இவை கோயிலில் பார்க்கப்படும் சகுனமாக அமைகின்றது. விநாயகப் பெருமான் முன் உடைக்கப்பட்ட தேங்காய் முடிப்பாகம் சிறுத்து வட்டமாக இருந்தால் செல்வம் வந்து சேரும். தேங்காய் மூன்றில் ஒரு பங்காக உடைந்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழியாத செல்வம் வந்து சேரும். இரண்டு பாகங்களும் சமனாக இருந்தால் இருந்து வந்த துன்பங்கள் நீங்கும். தேங்காய் உடைக்கும்போது முடிப்பாகம் இரண்டு கூறானால் அக்கினியால் பெரும் சேதம் உண்டாகும். அந்த இரண்டு கூறுகளோடு அவற்றின் ஓடு உடனே தெறித்து விழுந்தால் பொருட் சேதமும் நோய்களால் துன்பமும் உண்டாகும். உடைக்கும் போது தெறித்தோடிய ஓட்டில் கண் தெரிந்தால் மரணம் உண்டாகும். தேங்காயை உடைக்கும்போது நீளவாக்கில் பிளந்துவிட்டால் செல்வம் எல்லாம் போய்விடும். கையில் தேங்காயைப் பிடித்து உடைக்கும் பொழுது கைபிடியில் இருந்து தேங்காய் தவறிவிட்டால் குடும்பம் நாசமாகிவிடும். இப்படிப் பலவிதமான தேங்காய்ச் சகுனங்கள் பார்க்கப்படுகின்றது.

## பயணத்திற்கு ஆகாத நட்சத்திரம்

திருவாதிரை, பரணி, கார்த்திகை, ஆயிலியம், பூரம், பூராடம், புரட்டாதி, ரேவதி, சித்திரை, மகம், கேட்டை என்ற 12 நட்சத்திரங்களும் உள்ள நாட்களில் பயணம் செல்வதைத் தவிர்க்க வேண்டும். இந்த 12 நட்சத்திரம் வரும் நாட்களில் கடன்கொடுத்தல் கூடாது. இந்த நாட்களில் கொடுத்த கடன் திரும்பி வராது.

**காக்கைச் சகுனம்:-**

நாம் ஒருகாரியத்தின் பொருட்டு பயணம் செய்யும்பொழுது காக்கை ஒன்று கரைந்து கொண்டு நமக்கு நேராக எதிரில் வந்தால், காரியம் நிறைவேறாது திரும்ப வேண்டிவரும் பயணம் செய்யும் காக்கை முதலில் இடப்பக்கத்திலும் பிறகு வலப்பக்கத்திலும் கரைந்தால் திருடர்கள் தொல்லை எதிரிகள் தொல்லைகள் ஏற்படும். அவ்வாறு இல்லாமல் முதலில் வலப்பக்கத்திலும் பிறகு இடப்பக்கத்திலும் கரைந்தால் கருதிச் செல்லும் காரியத்தில் வெற்றியும் தனலாபமும் உண்டு. இடப்பக்கத்தில் காக்கை கரைந்து கொண்டு பயணம் செய்பவரின் பின்னால் வந்தால் தனலாபம் இடப்பக்கத்தில் கரைந்து எதிரில் வந்தால் பயணத்தில் தடங்கல் உண்டாகும். காரியம் கருதிப் பயணம் செய்பவரது நெற்றிக்கு மேலாக ஒரு காக்கை வட்டமிட்டால் காரியம் சிறப்பாக அமைவதுடன் நல்ல உணவும் கிட்டும். பயணம் செய்பவர் காக்கை இடப்பக்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திலிருந்து வலப்பக்கம் செல்வதைக் கண்டால் அவருக்குக் காரியத்தில் வெற்றியுண்டாகும். பயணம் செய்பவர் ஒரு காக்கை வாயில் மற்றொரு காக்கை உணவு ஊட்டிக்கொண்டிருப்பதைக் கண்டால் சுகமான வாழ்வு உண்டாகும்.

நாம் ஒரு காரியத்தைக் குறித்து சிந்திக்கும்போது ஆலோசித்துக்கொள்ளும்போதும் பயணம் செய்யும்போதும் காக்கை கரைதல் உண்டு. காக்கை கரைதலின் பலன் நேரத்துக்கு நேரம் மாறுபடும். பகல் நேரம் எட்டு முகூர்த்தங்களாக பகுக்கப்பட்டு பலன் அறியவும்.

**ஒரு முகூர்த்தம் $1^1/_2$ மணித்தியாலம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | முதல் முகூர்த்தம் | – | இலாபம் |
| 2. | இரண்டாம் முகூர்த்தம் | – | சேதம் |
| 3. | மூன்றாம் முகூர்த்தம் | – | வரவு |
| 4. | நான்காம் முகூர்த்தம் | – | தனம் |
| 5. | ஐந்தாம் முகூர்த்தம் | – | மழை |
| 6. | ஆறாம் முகூர்த்தம் | – | போர் |
| 7. | ஏழாம் முகூர்த்தம் | – | மரணம் |
| 8. | எட்டாம் முகூர்த்தம் | – | அச்சம் |

## நாம் வணங்கும் முறைகள்

நாம் நாளாந்த வாழ்க்கையில் தெய்வங்களையும் பெற்றோரையும் பெரியோர்களையும் பணிந்து வணங்கி வாழ்தல் முறையாகும். இதனால் நன்மையும் பெருகும்.

தெய்வங்களில் மும்மூர்த்திகளுக்கும் நம் சிரசின் மேல் ஒரு அடி உயர்த்திக் கைகூப்பி வணங்குதல் வேண்டும். மற்ற தெய்வங்களுக்கு சிரசின் மேல் கைகூப்பி வணங்குதல் வேண்டும். தந்தைக்கு வாய்க்கு நேர் கைகூப்பி வணங்குதல் வேண்டும். தாய்க்கு வயிற்றுக்கு நேர் கைகூப்பி வணங்குதல் வேண்டும். குருவுக்கு நெற்றியில் கைகூப்பி வணங்குதல் வேண்டும். அந்தணருக்கு மார்புக்கு நேர் கைகூப்பி வணங்குதல் வேண்டும். தந்தை, தாய், குரு, தெய்வம் ஆகியோருக்கு ஆண்கள் அஷ்டாங்க நமஸ்காரம் செய்யலாம். தந்தை, தாய், குரு, தெய்வம், கணவர் ஆகியோருக்கு பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரம் செய்யலாம்.

**தொகுப்பு - செல்வி யோ. சுப்பிரமணியம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருந்துதல் வேண்டா

ஆத்மா பிறப்பதில்லை. ஆத்மா ஒரு முறை இருந்து பின்னா் இல்லாது போவதில்லை. ஆத்மா பிறப்பற்றது; அநவரதன்; சாசுவதன், பழமையோன். உடம்பு கொல்லப்படுகையிலும் ஆத்மா கொல்லப்படுவதில்லை.

தைத்த துணிகளைக் கழற்றி எறிந்துவிட்டு மனிதன் புதிய துணிகளை கொள்வது போல ஆத்மா நைந்த உடலை களைந்து புதிய உடலில் தோற்றுகிறது.

ஆத்மாவை ஆயுதங்கள் வெட்டமாட்டாது. தீ எரிக்காது. நீா் நனைக்காது. காற்று உலா்த்தாது. உயிா்களின் ஆரம்பம் தெரியாது. நடுநிலைமை தெரியும். ஆத்மாவின் இறுதி நிலையும் தெரியாது.

ஆகவே நாம் ஆத்மாவை நம்மைப்பற்றி துயரப்பட வேண்டிய தில்லை. எவரிடத்தும் எல்லோரிடத்துமுள்ள இந்த ஆத்மா கொல் லப்படமுடியாதது.

ஆகவே நாம் எந்த உயரின் பொருட்டும் வருந்தவேண்டிய தில்லை.

"பகவத்கீதை"

***ஆக்கம் (எழுதியவர்) P. சந்திரசேகரம்*** M.A.
*ஆசிரியர்.*

*இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்*
*நல்லாற்றில் நின்ற துணை.*


*தமிழ்மறை 41.*

*துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்*
*இல்வாழ்வான் என்பான் துணை.*

*தமிழ்மறை 42.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவில்கின்றோம்

எமது குடும்பத் தலைவர் கதிரேசு சுப்பிரமணியம் பிரபல சோதிடர் அவர்கள் தமது அமரத்துவத்தின் சடங்குகளில், இறுதிக் கிரியைகளில், நேரில் கலந்து கொண்டவர்கட்கும்,

அந்தியேட்டி, சபிண்டீகரண - ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து சகல உதவிகளையும் செய்தவர்கட்கும்,

தொடர்ந்து எமக்கு அன்பு உரிமையோடு உள்ளூர், வெளிநாடுகளிலிருந்து அனுதாபச் செய்திகளை தொலைத் தொடர்பு சாதனங்கள் மூலமும் கடிதம் மூலமும் தெரிவித்தோருக்கும்,

எங்கள துன்ப நிலைமையிலும் மனம் ஆறச் செய்த நண்பர்கள், உறவினர்கள் மற்றும் பல்வேறு வழிகளில் எமக்கு உதவி புரிந்த அனைவருக்கும்

எமது பணிவான நன்றியைச் செலுத்துகின்றோம்.

**- குடும்பத்தினர்.**

*258/1, கோவில் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வமிசாவழி

கதிரேசு + விசாலாட்சி - சுப்பிரமணியம்

முத்துத்தம்பி + தங்கம்மா - நாகரெத்தினம்

சுப்பிரமணியம் + நாகரெத்தினம்

1. பரமேஸ்வரி + தர்மலிங்கம் (அமரர்)

லிங்கேஸ்வரி + மகேஸ்வரன் - திவ்யன், சுபகா

தர்மசீலன் + நித்தியலட்சுமி

சண்முகசீலன்

தர்மேஸ்வரி + சுதாகரன் - பவப்பிரியன்

சத்தியசீலன்

2. சிவமணி + கணேசலிங்கம் - ஜெயக்குமார்

ராஜ்குமார்

சிவாஜினி

3. சண்முகநாதன் + செல்வரட்ணம் - நல்லைக்குமரன்

இசைவாணி + சோதிநாதன்

லக்சுமி

4. தனபாலசிங்கம் + சந்திரவதனா (அமரர்)

5. யோகேஸ்வரி

6. சந்திரபுஷ்பராணி + சூரியகுமாரன் - சுபநேமி

சுபராமி

7. சிவதர்ஷினி + அருள்ராஜா - லக்ஷன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதி பதிப்பகம், 430, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org